Private
E-Sevai
Center
CSC Center
STAR RAINBOW
SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான இலவச
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 3 சென்னை | தினசரி | 4 பக்கம் சனிக்கிழமை, அக்டோபர் 07, 2023 4 பக்கங்கள் ரூ.2/- இதழ் 85

2023 உலக கோப்பை ஐ சி சி கிரிக்கெட் போட்டி நடைபெறும் நாட்களில் போக்குவரத்து மாற்றம்

ICC MEN'S
CRICKET WORLD CUP
INDIA 2023

சென்னை, அக்டோபர் 07 2023: உலக கோப்பை ஐ சி சி கிரிக்கெட் 2023 சென்னை எம்.ஏ. சிதம்பரம் கிரிக்கெட் மைதானத்தில் *08.10.2023, 13.10.2023, 18.10.2023, 23.10.2023* மற்றும் *27.10.2023* ஆகிய நாட்களில் நடைபெறுவதை முன்னிட்டு கீழ்க்கண்ட சாலைகளில் போட்டி நடைபெறும் நாட்களில் மதியம் 12.00 மணி முதல் 22.00 மணி வரை கீழ்கண்டவாறு போக்குவரத்து மாற்றங்கள் செய்யப்படுகிறது.

1 விக்டோரியா ஹாஸ்டல் ரோடு (கெனால் ரோடு)

இந்த சாலைக்கு பாரதி சாலையில் இருந்து வாகனங்கள் செல்லலாம் வாலாஜா சாலையில் இருந்து வாகனங்கள் செல்ல அனுமதி இல்லை. 2 பெல்ஸ் சாலை 1. இந்த சாலை தற்காலிக ஒருவழி பாதையாக மாற்றப்பட்டு பாரதி சாலை ஜ் பெல்ஸ் சாலை சந்திப்பிலிருந்து வாகனங்கள் செல்லலாம் வாலாஜா சாலை - பெல்ஸ் சாலை சந்திப்பிலிருந்து பெல்ஸ்சாலைக்கு வாகனங்கள் செல்ல அனுமதி இல்லை. 2. கண்ணகி சிலையில் இருந்து வரும் எம் டி சி பேருந்துகள் பெல்ஸ் சாலைக்கு செல்ல அனுமதி இல்லை நேராக ரத்னா கபே சந்திப்பு வழியாக திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை சென்று தங்கள் இலக்கை அடையலாம் 3 பாரதி சாலை 1. ரத்னா கபே சந்திப்பிலிருந்து வரும் வாகனங்கள் பாரதிசாலை - பெல்ஸ்சாலை சந்திப்பில் திருப்பப்பட்டு பெல்ஸ் சாலை வழியாக வாலாஜாசாலை சென்று தங்கள் இலக்கை சென்றடையலாம். 2. பாரதிசாலை - பெல்ஸ் சாலை சந்திப்பில் இருந்து நேராக கண்ணகி சிலை செல்வதற்கு அனுமதி இல்லை. 4 வாலாஜா சாலை 1 . அண்ணாசாலையில் இருந்து அண்ணாசிலை வழியாக வாலாஜாசாலை வரும் எம், டி, வி ஆகிய எழுத்துக்கள் கொண்ட வாகன நிறுத்த அனுமதி அட்டைகள் உள்ள வாகனங்கள் வாலாஜா சாலை, உழைப்பாளர் சிலை, காமராஜர் சாலை, கண்ணகி சிலை, பாரதி சாலை வழியாக விக்டோரியா சாலை சென்று தங்கள் வாகன நிறுத்தத்தை அடையலாம். 2. வாலாஜா சாலை - பெல்ஸ் சாலை சந்திப்பிலிருந்து பெல்ஸ் சாலைக்கு வாகனங்கள் செல்ல அனுமதி இல்லை. 3. அண்ணாசாலையில் இருந்து அண்ணாசிலை வழியாக வாலாஜா சாலை வரும் பி & ஆர் ஆகிய எழுத்துக்கள் கொண்ட வாகன நிறுத்த அனுமதி அட்டைகள் உள்ள வாகனங்கள் வாலாஜா சாலை வழியாக சென்று அந்தந்த வாகன நிறுத்துமிடங்களுக்கு செல்லலாம். 5 காமராஜர் சாலை போர் நினைவு சின்னம் மற்றும் காந்தி சிலை வழியாக வரும் வாகனங்கள் எம், டி, வி ஆகிய எழுத்துக்கள் கொண்ட வாகன நிறுத்த அனுமதி அட்டைகள் உள்ள வாகனங்கள் பாரதி சாலை வழியாக விக்டோரியா சாலை சென்று அந்தந்த வாகன நிறுத்துமிடங்களுக்கு செல்லலாம். போர் நினைவு சின்னம் மற்றும் காந்தி சிலை வழியாக வரும் வாகனங்கள் பி & ஆர் ஆகிய எழுத்துக்கள் கொண்ட வாகன நிறுத்த அனுமதி அட்டைகள் உள்ள வாகனங்கள் காமராஜர் சாலை, கண்ணகி சிலை, பாரதி சாலை, பெல்ஸ் சாலை மற்றும் வாலாஜா சாலை வழியாக சென்று அந்தந்த வாகன நிறுத்துமிடங்களுக்கு செல்லலாம். உழைப்பாளர் சிலையிலிருந்து வாகனங்கள் வாலாஜா சாலை செல்ல அனுமதி இல்லை 6 அனுமதி அட்டை இல்லாத வாகனங்கள்

1 . அண்ணாசாலையில் இருந்து அண்ணாசிலை வழியாக வாலாஜா சாலை வரும் வாகனங்கள் உழைப்பாளர் சிலை காமராஜர் சாலை வழியாக பி டபிள்யூ டி எதிராக உள்ள கடற்கரை உட்புறச்சாலையில் உள்ள வாகன நிறுத்தங்களுக்கு செல்லலாம். 2 போர் நினைவு சின்னம் வழியாக வரும் வானங்கள், காமராஜர் சாலை வழியாக பி டபிள்யூ டி எதிராக உள்ள கடற்கரை உட்புறச்சாலையில் உள்ள வாகன நிறுத்தங்களுக்கு செல்லலாம்

3 காந்தி சிலையில் இருந்து வரும் வாகனங்கள் காமராஜர் சாலை வழியாக பி டபிள்யூ டி எதிராக உள்ள கடற்கரை உட்புறச்சாலையில் நிறுத்தங்களுக்கு செல்லலாம். மேற்கண்ட மாற்றங்களுக்கு வாகன ஓட்டிகள் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஈரான் சிறையில் அடைக்கப்பட்டுள்ள பெண்ணுரிமை ஆர்வலர் நர்கீஸ் முகம்மதிக்கு அமைதிக்கான நோபல் பரிசு

சென்னை, அக்டோபர் 07 2023: சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் ஈரான் பெண்ணுரிமை சமூக ஆர்வலர் நர்கீஸ் முகம்மதி அமைதிக்கான நோபல் பரிசுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

சுவீடனைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் ஆல்பிரட் நோபல் பல்வேறு ஆராய்ச்சிகளில் ஈடுபட்டவர். குறிப்பாக டைனமைட் என்ற வெடிபொருளை கண்டுபிடித்து உலக புகழ் பெற்றார். ஆனால், டைனமைட் வெடிபொருளால் பெரும் பாதிப்பு ஏற்படுவதை கண்டு வேதனை அடைந்தார். இவரது சகோதரர் இறந்த போது, ஆல்பிரட் நோபல்தான் இறந்து விட்டார் என்று நினைத்து, 'மரண வியாபாரி மரணம்' என்று பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன. அதன்பின், தனது சொத்துகள் அனைத்தையும் சமூக மேம்பாட்டுக்கு சிறந்த பங்களிப்பை வழங்குபவர்களுக்கு விருதாக வழங்கும்படி உயில் எழுதி வைத்தார்.

அதன்படி ஆண்டுதோறும் மருத்துவம், இயற்பியல், வேதியியல், பொருளாதாரம், அமைதி, இலக்கியம் என 6 துறைகளில் சாதனை படைப்பவர்களுக்கு நோபல் பரிசு வழங்கப்படுகிறது. ஐந்து பரிசுகள் மட்டும் சுவீடனில் வழங்கப்படுகின்றன.

அமைதிக்கான நோபல் பரிசு மட்டும் நார்வேயின் ஒஸ்லோ நகரில் வழங்கப்படுகிறது. அந்த வகையில் 2023-ம் ஆண்டுக்கான நோபல் பரிசுகள் கடந்த 2-ம் தேதி முதல் அறிவிக்கப்பட்டு வருகின்றன. ஏற்கெனவே மருத்துவம், இயற்பியல், வேதியியல், இலக்கியத்திற்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டு விட்டன.

இந்நிலையில் அமைதிக்கான நோபல் பரிசு நேற்று அறிவிக்கப்பட்டது. ஈரான் நாட்டைச் சேர்ந்த மனித உரிமைகளுக்கான பெண்சமூக ஆர்வலர் நர்கீஸ் முகம்மதி அமைதிக்கான நோபல் பரிசுக்குதேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

ஈரானில் சமூக மாற்றங்களுக்காக தொடர்ந்து போராடி வருபவர் நர்கீஸ். இதுவரை 13 முறை அவரை கைது செய்துள்ளனர். ஐந்து முறை சிறையில் அடைக்கப்பட்டார். அத்துடன் 31 ஆண்டுகள் சிறை மற்றும் 154 கசையடியும் இவருக்கு தண்டனையாக வழங்கப்பட்டன. பெண்களை ஒடுக்குமுறைக்கு ஆளாக்குவதை எதிர்த்து போராடியவர். அவர் தற்போதும் டெஹ்ரானில் உள்ள சிறையில் இருக்கிறார். அனைவருக்கும் சுதந்திரம், பெண்கள் முன்னேற்றம், மனித உரிமைகள் போன்றவற்றுக்காக துணிச்சலாக குரல் கொடுத்து வருகிறார். பெண்ணுரிமை, மரண தண்டனையை ஒழிக்க வேண்டும் போன்றவற்றுக்காக அவர் தொடர்ந்து குரல் கொடுத்தார். அதற்காக அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்படுகிறது என்று தேர்வு குழு தெரிவித்துள்ளது.

ஈரானில் பெண்கள் தொடர்ந்து அடக்குமுறைக்கு ஆளாகி வருகின்றனர். பொதுவெளியில் சரியாக ஆடை அணியவில்லை என்று மெஹ்சா அமினி என்ற குர்திஷ் இனஇளம்பெண்ணை, ஈரான் போலீஸார் கைது செய்து சித்ரவதை செய்தனர். போலீஸ் காவலில் அவர் உயிரிழந்தார். இதை கண்டித்து ஈரானில் பெரும் போராட்டம் வெடித்தது. இந்நிலையில் ஈரானைச் சேர்ந்த சமூக ஆர்வலர் நர்கீஸ் முகம்மதிக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

What We Do
Build Your Future With Us
RTN.DR.R.SATHYANARAYANAN
Director
Business Development
+91 9360136897
+91 8148231942
Who We Are
Oasis Grace
Engineering projects Pvt Ltd
25 Locations
450+ Employees
500+ Projects
20+ Years of Excellence
Key Members
Our Clientele
-JMR
Our Projects
Projects in India
Projects in Coimbatore
Projects in Bangalore
Projects in Chennai

இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்
ALL ONLINE SERVICES

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

"டைகர்-3யின் ஆக்சன் கண்கவர்வதாக இருந்தது" ; அக்-16ல் அதன் டிரைலர் வெளியாவதற்கு முன் படத்தில் இருந்து என்ன எதிர்பார்க்கலாம் என சல்மான்கான் கூறுகிறார்

சென்னை, அக்டோபர் 07 2023: சூப்பர்ஸ்டார் சல்மான்கான் யஷ்ராஜ் பிலிம்ஸின் 'டைகர் 3' டிரைலரை அக்-16ஆம் தேதி வெளியிட இருக்கிறார். மேலும் படக்குழுவினர் உண்மையிலேயே ஆக்சன் தொகுப்பாக இதை உருவாக்கியுள்ளனர் என்றும் அவர் கூறியுள்ளார். யஷ்ராஜ் பிலிம்சின் ஸ்பை திரில்லராக உருவாகியுள்ள 'டைகர் 3' மிகப்பெரிய தீபாவளி வெளியீடாக வெளியாக இருக்கிறது.

சல்மான்கான் கூறும்போது, "யஷ்ராஜ் பிலிம்ஸில் உருவான ஏக்தா டைகர், டைகர் ஜிந்தா ஹை ஆகிய ஸ்பை யுனிவர்ஸ் படங்களை மக்கள் பார்த்திருக்கிறார்கள். அதனால் அவர்களின் பார்வைக்கு விருந்தாக புதிதாக, தனித்துவமான ஆச்சர்யமான சிலவற்றை கொடுக்க வேண்டியது முக்கியமானதாக இருந்தது. டைகர் 3 படக்குழுவினர் உண்மையிலேயே ஆக்சன் தொகுப்பாக இதை உருவாக்கியுள்ளனர் அது கண்கவரும் விதமாக இருக்க வேண்டி இருந்தது. அங்கே வேறு எந்தவொரு விருப்பமும் இருந்ததில்லை" என்கிறார்.. மனீஷ் ஷர்மா இயக்கியுள்ள இந்த டைகர் 3 படத்தின் டிரைலருக்கு இணையத்தில் வெறித்தனமான எதிர்பார்ப்பு இருக்கிறது. பாக்ஸ் ஆபீஸில் நூறு சதவீத பிளாக் பஸ்டர் வெற்றியை பெறுவதற்காக எப்படி ஆதித்ய சோப்ரா யஷ்ராஜ் பிலிம்ஸின் ஸ்பை யுனிவர்ஸை வடிவமைத்துக்கொண்டு இருக்கிறார் என்பதை இந்த திரைப்படம் சொல்ல இருக்கிறது. ஏக்தா டைகர், டைகர் ஜிந்தா ஹி, வார், பதான், மற்றும் இப்போது டைகர் 3 ஆகியவை யஷ்ராஜ் பிலிம்ஸின் ஸ்பை யுனிவர்ஸ் படங்கள் ஆகும்.

தனக்காக படப்பிடிப்பில் விரிவாக திட்டமிடப்பட்ட அதிரடி சண்டைக்காட்சிகளை படப்பிடிப்பு தளத்தில் பார்க்கும்போது ஒரு குழந்தையாக மாறிவிட்டேன் என்றகிறார் சல்மான் கான்

"டைகர் 3 படக்குழு இதுவரை இந்திய சினிமாவில் பார்த்திராத வகையில் பல விஷயங்களை செயல்படுத்தி இருக்கிறது. அதிரடியாக உருவாக்கப்பட்ட இந்த ஆக்சன் காட்சிகளில் நானும் ஒரு பங்காக இருக்க விரும்பினேன். மேலும் அந்த காட்சிகளில் நான் நடித்தபோது ஒரு குழந்தையை போலவே மாறிவிட்டேன். இது போன்ற மிகப்பெரிய தருணங்களுடன் உங்களை உற்சாகப்படுத்தும் விதமாக டைகர் 3 டிரைலரை நாங்கள் வெளியிடும்போது படத்தை விளம்பரப்படுத்தும் எங்களது அடுத்த சொத்தாக அது அமையப்போகிறது" என்கிறார் சல்மான் கான்.

சல்மான் மேலும் கூறும்போது, "டைகர் 3 படத்தின் கதை முழுவதும் அந்த நாளை காப்பாற்ற சூப்பர் ஏஜென்ட் டைகர் மேற்கொள்ளும் உயிருக்கு ஆபத்தான பணியில் திருப்பங்கள் நிறைந்ததாக இருக்கும்" என்கிறார்.

"டிரைலர் மற்றும் திரைப்படத்தில் எதிர்பாராததை எதிர்பாருங்கள்.. மேலும் உண்மையிலேயே தீவிரமான ஒரு கதைக்கருவை கொண்டுள்ள ஒரு பொழுதுபோக்கு ஆக்சன் படத்திற்காக தயாராகுங்கள்.. டைகர் 3 படத்தின் கதை உடனடியாக என்னை கவர்ந்திழுத்தது. ஆதியும் அவரது குழுவும் இந்த கதையுடன் வந்தபோது என்னால் நம்ப முடியவில்லை. இது உறுதியாக டைகரின் மிகுந்த அபாயகரமான மிஷனாக இருக்கும் என்பதால் அவர் கிடைத்த வாய்ப்பை பயன்படுத்துவதற்காக தனது வாழ்க்கையில் மிகப்பெரிய ரிஸ்க்கும் எடுக்க வேண்டி இருக்கிறது" என்றும் கூறுகிறார் சல்மான்கான்.

வைரா என்டர்டெயின்மென்ட்ஸ் தயாரிப்பில் ஷௌர்யுவ் இயக்கத்தில் நேச்சுரல் ஸ்டார் நானி நடிக்கும் 'ஹாய் நான்னா' திரைப்படத்தின் இரண்டாம் பாடலான 'கண்ணாடி கண்ணாடி'-யை சிவகார்த்திகேயன் வெளியிட்டார்

hi நான்னா
SHOURYUV
Kannaadi Kannaadi
OUT NOW

சென்னை, அக்டோபர் 07 2023: நேச்சுரல் ஸ்டார் நானி மற்றும் மிருணாள் தாக்கூர் முதன்முறையாக ஜோடி சேரும் பான்-இந்தியா திரைப்படமான 'ஹாய் நான்னா' ரசிகர்களால் பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது. படத்தின் மீதுள்ள ஆர்வத்தை இந்த கண்கவர் ஜோடி அதிகப்படுத்தியுள்ள போதிலும், 'லீவீ நான்னா' ஒரு வழக்கமான காதல் கதை அல்ல.

அப்பா-மகளின் அழகான, உணர்ச்சிகரமான பயணத்தை 'லீவீ நான்னா' சித்தரிக்கும். ஷௌர்யுவ் இயக்குநராக அறிமுகமாகும் இத்திரைப்படத்தை பெரும் பொருட்செலவில் வைரா என்டர்டெயின்மென்ட்ஸ் பேனரில் மோகன் செருக்கூரி (சிவிஎம்) மற்றும் டாக்டர் விஜேந்தர் ரெட்டி தீகலா தயாரிக்கின்றனர். நானியின் மகளாக கியாரா கண்ணா நடிக்கிறார்.

முதல் பாடலான 'நிழலியே' நானி மற்றும் மிருணால் தாக்கூர் ஜோடிக்கு இடையேயான அருமையான கெமிஸ்ட்ரியை வெளிப்படுத்தி 'லீவீ நான்னா' திரைப்படத்தின் இனிமையான இசைப் பயணத்தை தொடங்கி வைத்த நிலையில், இப்படத்தின் இசை வெளியீட்டின் ஒரு பகுதியாக, இரண்டாம் பாடலான 'கண்ணாடி கண்ணாடி'-யை நடிகர் சிவகார்த்திகேயன் இன்று வெளியிட்டார்.

"அப்பா-மகள் உறவு என்பது தெய்வீகமானது. நானி நடிக்கும் 'லீவீ நான்னா' படத்தில் இடம்பெற்றிருக்கும் 'கண்ணாடி கண்ணாடி' பாடல் அனைத்து தந்தைகள் மற்றும் மகள்களுக்கு மிகவும் பிடிக்கும் என்று நம்புகிறேன்," என்று தனது டிவிட்டர் பக்கத்தில் சிவகார்த்திகேயன் தெரிவித்துள்ளார்.

தனி ஒருவனாக மகளை அன்புடன் வளர்க்கும் தந்தை மற்றும் அந்த குழந்தைக்கு இடையேயான பந்தத்தை இந்த பாடல் மிகவும் அழகாக வெளிப்படுத்துகிறது. மதன் கார்க்கியின் வரிகள் மனதை தொடுகின்றன. இப்பாடலுக்கு உணர்ச்சித் ததும்ப இசையமைத்துள்ள ஹேஷாம் அப்துல் வஹாப், அதை மிகவும் உயிரோட்டத்துடன் பாடியுள்ளார். வயலின், புல்லாங்குழல், பாஸ் கிதார் உன்கிட்ட இசைக்கருவிகள் சிறப்பாக பயன்படுத்தப்பட்டு ஆத்மார்த்தமான பாடலுக்கு வலு சேர்த்துள்ளன. நானி மற்றும் கியாரா கண்ணாவுக்கு இடையேயான அழகான புரிதல் இந்த பாடலின் சிறப்பம்சங்களில் ஒன்றாகும்.

முழு நீள குடும்ப படமான 'லீவீ நான்னா', சானு ஜான் வர்கீஸ் ஒளிப்பதிவில், பிரவீன் அந்தோணியின் படத்தொகுப்பில் உருவாகிறது. அவினாஷ் கொல்லா தயாரிப்பு வடிவமைப்புக்கு பொறுப்பேற்றுள்ளார். சதீஷ் ஈ வி வி நிர்வாக தயாரிப்பாளர் ஆவார்.

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் இந்தி ஆகிய மொழிகளில் ஒரே சமயத்தில் பான் இந்தியா திரைப்படமாக இந்த ஆண்டு டிசம்பர் 21 அன்று 'லீவீ நான்னா' வெளியாகிறது.

படக்குழுவினர்:

நடிகர்கள்: நானி, மிருணால் தாக்கூர், பேபி கியாரா கண்ணா

இயக்கம்: ஷௌர்யுவ்

தயாரிப்பு: மோகன் செருக்கூரி (சிவிஎம்) மற்றும் டாக்டர் விஜேந்தர் ரெட்டி தீகலா, தயாரிப்பு நிறுவனம்: வைரா என்டர்டெயின்மென்ட்ஸ், ஒளிப்பதிவு: சானு ஜான் வர்கீஸ், இசை: ஹேஷாம் அப்துல் வஹாப், தயாரிப்பு வடிவமைப்பு: அவினாஷ் கொல்லா, படத்தொகுப்பு: பிரவீன் அந்தோணி, நிர்வாகத் தயாரிப்பாளர் - சதீஷ் ஈ.வி.வி, ஆடை வடிவமைப்பாளர்: ஷீத்தல் ஷர்மா, மக்கள் தொடர்பு: நிகில் முருகன்.

சர்வதா சினி காரேஜ் மற்றும் ஷிமோகா கிரியேஷன்ஸ் தயாரிப்பில் அமுதாசாரதி இயக்கத்தில் யோகி பாபு, பிரமோத் ஷெட்டி நடிப்பில் குடும்ப உணர்வுகளும் நகைச்சுவையும் சரிவிகிதத்தில் கலந்த திரைப்படம் 'சன்னிதானம் பி.ஓ'

சென்னை, அக்டோபர் 07 2023: சபரிமலை பின்னணியில் தமிழ், மலையாளம் மற்றும் கன்னட மொழிகளில் ஒரே சமயத்தில் உருவாகிறது

மது ராவ் மற்றும் ஷபீர் பதான் ஆகியோர் சர்வதா சினி காரேஜ் மற்றும் ஷிமோகா கிரியேஷன்ஸ் சார்பில் தயாரிக்கும் புதிய திரைப்படத்திற்கு 'சன்னிதானம் பி.ஓ' என்று பெயரிடப்பட்டுள்ளது. அறிமுக இயக்குநர் அமுதாசாரதி இயக்கத்தில் யோகி பாபு மற்றும் கன்னட நடிகர் பிரமோத் ஷெட்டி முதன்மை வேடங்களில் நடிக்கும் இத்திரைப்படம் சபரிமலை பின்னணியில் தமிழ், மலையாளம் மற்றும் கன்னட மொழிகளில் ஒரே சமயத்தில் உருவாகிறது. திரைப்படம் குறித்து பேசிய இயக்குநர் அமுதாசாரதி, "சிறுவயதில் தொலைந்த தனது மகனை தேடும் ஒரு தாயின் கதையை குடும்ப உணர்வுகளும் நகைச்சுவையும் சரிவிகிதத்தில் கலந்து 'சன்னிதானம் பி.ஓ' சொல்லும். தாயாக சித்தாராவும், மகனாக யோகி பாபுவும் நடிக்கின்றனர். மற்றொரு முதன்மை கதாபாத்திரத்தில் கன்னட நடிகர் பிரமோத் ஷெட்டி நடிக்கிறார்," என்றார். தொடர்ந்து பேசிய அவர், "சபரிமலை பின்னணியில் நடக்கும் இக்கதையின் படப்பிடிப்பு சென்னையில் விரைவில் தொடங்க உள்ளது. பொள்ளாச்சி உள்ளிட்ட இடங்களில் படப்பிடிப்பு தொடர்ந்து நடைபெறும். உணர்வுப்பூர்வமான ஒரு கதையை நகைச்சுவை ததும்ப பார்வையாளர்களுக்கு இத்திரைப்படம் வழங்கும்," என்றார். வர்ஷா விஸ்வநாத், மேனகா சுரேஷ், மூணார் ரமேஷ், வினோத் சாகர் மற்றும் அஸ்வின் ஹாசன் ஆகியோர் 'சன்னிதானம் பி.ஓ' திரைப்படத்தில் முக்கிய வேடங்களில் நடிக்கின்றனர். கதை மற்றும் திரைக்கதையை அஜினு ஐயப்பன் எழுத, இயக்குநர் அமுதாசாரதி வசனங்களை எழுதியுள்ளார். ஒளிப்பதிவை வினோத் பாரதி. ஏ, படத்தொகுப்பை பொன் கதிரேஷ், உடைகள் வடிவமைப்பை நடராஜ், ஒப்பனையை ஷிபுகுமார், கலையை விஜய் தென்னரசு, சண்டை பயிற்சியை மிரட்டல் சிவா மற்றும் மக்கள் தொடர்பை நிகில் முருகன் கவனிக்கின்றனர். சர்வதா சினி காரேஜ் மற்றும் ஷிமோகா கிரியேஷன்ஸ் பேனர்களில் மது ராவ் மற்றும் ஷபீர் பதான் தயாரிப்பில் அமுதாசாரதி இயக்கத்தில் யோகி பாபு, பிரமோத் ஷெட்டி முதன்மை வேடங்களில் நடிக்கும் 'சன்னிதானம் பி.ஓ' திரைப்படத்தின் படப்பிடிப்பு விரைவில் தொடங்க உள்ளது.

இந்தியாவின் முதல் 10 பணக்காரர்கள்: முகேஷ் அம்பானி மீண்டும் முதலிடம்

சென்னை, அக்டோபர் 07 2023: புளூம்பெர்க் நிறுவனம் வெளியிட்டுள்ள உலக பணக்காரர்கள் பட்டியலில், இந்தியாவின் முதல் 10 பணக்காரர்களில் முகேஷ் அம்பானி மீண்டும் முதலிடம் பிடித்துள்ளார்.

புளூம்பெர்க் நிறுவனம் உலக பணக்காரர்கள் பட்டியலை வெளியிட்டுள்ளது. அதில், பெட்ரோ கெமிக்கல், எண்ணெய் மற்றும் எரிவாயு, டெலிகாம் மற்றும் ரீடெயில் மாதிரியான தொழில்களில் ஈடுபட்டு வரும் ரிலையன்ஸ் குழுமத் தலைவராக உள்ள முகேஷ் அம்பானி, இந்தியாவின் டாப் 10 பணக்காரர்கள் பட்டியலில் முதலிடத்தில் உள்ளார். சர்வதேச அளவில் அவர் 11-வது இடத்தில் உள்ளார். அவரது மொத்த சொத்து மதிப்பு ரூ.7.13 லட்சம் கோடி.

10 பேரில் ஒரே பெண் பணக்காரர்

இரண்டாம் இடத்தில் அதானி குழும தலைவர் கௌதம் அதானி உள்ளார். அவரது மொத்த சொத்து மதிப்பு ரூ.5.17 லட்சம் கோடி. என்ஜினீயரியங், கட்டுமான நிறுவனமான ஷபூர்ஜி பலோன்ஜி குழுமத்தின் ஷபூர் பலோன்ஜி மிஸ்திரி - ரூ.2.60 லட்சம் கோடியுடன் 3 வது இடமும், எச்சிஎல் கணினி குழும நிறுவனர் ஷிவ் நாடார் - ரூ.2.36 லட்சம் கோடியுடன் 4 வது இடமும், விப்ரோ நிறுவனர் அசிம் பிரேம்ஜி - ரூ.1.94 லட்சம் கோடியுடன் 5 வது இடமும், சீரம் இன்ஸ்டியூடின் சைரஸ் பூனாவாலா - ரூ.1.56 லட்சம் கோடியுடன் 6 வது இடமும் பெற்றுள்ளனர்.

இந்தியாவின் முதல் 10 பணக்காரர்களில் இடம்பெற்றுள்ள ஒரே பெண்ணான ஜிண்டால் குழுமத்தின் சாவித்ரி ஜிண்டால் - ரூ.1.53 லட்சம் கோடியுடன் 7 வது இடமும் பெற்றுள்ளார். சர்வதேச அளவில் 82-வது இடத்தில் அவர் உள்ளார். இவர் ஜிண்டால் குழுமத்தின் கௌரவத் தலைவராக செயல்பட்டு வருகிறார். சன் பார்மாசூட்டிகல் நிறுவனர் திலீப் சங்வி - ரூ.1.52 லட்சம் கோடியுடன் 8 வது இடமும், அவென்யூ சூப்பர் மார்ட், பிரைட்ஸ்டார் இன்வெஸ்ட்மென்ட் நிறுவனர் ராதாகிருஷ்ணன் தாமினி - ரூ.1.44 லட்சம் கோடியுடன் 9 வது இடமும் பெற்றுள்ளனர். இரும்பு உற்பத்தி ஜாம்பவான் லட்சுமி மிட்டல் - ரூ.1.41 லட்சம் கோடியுடன் 10 வது இடத்தை பெற்றுள்ளார்.

ஐசிஐசிஐ பேங்க், முன்னணி பிராண்டுகளில் சலுகைகள், தள்ளுபடிகள் மற்றும் கேஷ்பேக் உடன் 'பண்டிகை பொனான்சா'வை அறிமுகப்படுத்துகிறது

சென்னை, அக்டோபர் 07 2023: ஐசிஐசிஐ பேங்க் தனது வாடிக்கையாளர்களுக்கு பண்டிகை காலத்தின் துவக்கத்தில் உற்சாகமான சலுகைகள், தள்ளுபடிகள் மற்றும் ரூ.26,000 வரை கேஷ்பேக்குகளுடன் 'ஃபெஸ்டிவ் பொனான்சா' இன் இந்த அறிமுகத்தை இன்று அறிவித்தது. ஐசிஐசிஐ பேங்க் இன் கிரெடிட்/டெபிட் கார்டுகள், இன்டர்நெட் பேங்கிங், ரூபே கிரெடிட் கார்டுகள் வழியாக யூ பி ஐ கார்ட்லெஸ் ஈஎம்ஐ ஆகியவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் தங்களுக்குப் பிடித்த பிராண்டுகளிலிருந்து பல்வேறு பொருட்களை வாங்குவதன் மூலம் வாடிக்கையாளர்கள் இந்த நன்மைகளைப் பெறலாம். இந்தச் சலுகைகள் வங்கியின் கிரெடிட்/டெபிட் கார்டுகளைப் பயன்படுத்தி, கட்டணமில்லா ஈ எம் ஐ களின் வழியாகவும் வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்கும்.

பண்டிகைக் காலத்தில் வாடிக்கையாளர்களின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, ஐபோன் உட்பட மேக் மைட்ரிப் , டாடா நியூ, ஒன்பிளஸ், எச் பி, மைக்ரோசாப்ட், குரோமா, ரிலையன்ஸ் டிஜிட்டல், எல்.ஜி. சோனி, சாம்சங், தனிஷ்க், தாஜ் சொமாட்டோ மற்றும் ஸ்விக்கி போன்ற பல முன்னணி பிராண்டுகளின் ஒரு

வகையுடன் எலக்ட்ரானிக்ஸ், மொபைல்கள், அலங்காரம், நகைகள், வீட்டு தளபாடங்கள், பயணம், டைனிங் மற்றும் பல்வேறு வகைகளிலும் இந்த வங்கி சலுகைகளைத் தேர்ந்தெடுத்துள்ளது. தி பிக் பில்லியன் டேய்ஸ் விற்பனைக்கு (அக்டோபர் 8 முதல் அக்டோபர் 15 வரை), ஃபிளிப்கார்ட்டுடன், பிக் ஃபேஷன் ஃபெஸ்டிவல் (அக்டோபர் 6 முதல் அக்டோபர் 19 வரை) மின்ட்ரா உடன் மற்றும் கிரேட் இந்தியன் ஃபெஸ்டிவல் விற்பனைக்கு (அக்டோபர் கடைசி வாரத்தில்) அமேசான் உடன் இந்த வங்கி கூட்டு சேர்ந்துள்ளது. இந்த வங்கி தனது வாடிக்கையாளர்களுக்கு வீட்டுக் கடன், வாகனக் கடன் மற்றும் இரு சக்கர வாகனக் கடன் போன்ற சில்லறை கடன் தயாரிப்புகளில் சிறப்பு மற்றும் கவர்ச்சிகரமான சலுகைகளை விரைவில் அறிமுகப்படுத்தும்.

ஐசிஐசிஐ பேங்க் இன் செயல் இயக்குநர் திரு. ராகேஷ் ஜா இந்த அறிமுகம் குறித்து பேசுகையில், "எங்கள் வாடிக்கையாளர்களுக்கு பலவிதமான சலுகைகள், தள்ளுபடிகள் மற்றும் கேஷ்பேக்குகளை உள்ளடக்கிய 'ஃபெஸ்டிவ் பொனான்சா' வை அறிமுகப்படுத்துவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். எங்களின் வாடிக்கையாளர்களுக்கு பொருத்தமான அற்புதமான சலுகைகளை கொண்டுவர இந்த பேங்க் முன்னணி பிராண்டுகள் மற்றும் ஈ-காமர்ஸ் தளங்களுடன் கூட்டு சேர்ந்துள்ளது. ஐசிஐசிஐ பேங்க் இன் கிரெடிட்/டெபிட் கார்டுகள், இன்டர்நெட் பேங்கிங், ஐசிஐசிஐ பேங்க் இன் ரூபே கிரெடிட் கார்டுகள் மூலம் யுபிஐ பரிவர்த்தனைகள் மற்றும் கார்ட்லெஸ் ஈஎம்ஐ ஆகியவற்றைப் பயன்படுத்தி வாடிக்கையாளர்கள் இந்தச் சலுகைகளைப் பெறலாம். இது தவிர, இந்த வங்கி வீட்டுக் கடன், வாகனக் கடன் மற்றும் இரு சக்கர வாகனக் கடன் போன்ற அதன் திட்டங்களின் மீது சிறப்பு பண்டிகை சலுகைகளை அறிமுகப்படுத்தும். இந்த பண்டிகை காலத்தில் இந்த சலுகைகள் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் சேர்க்கும் என்று நம்புகிறோம். "என்று கூறினார்.

முன்னணி பிராண்டுகள் மற்றும் இ-காமர்ஸ் தளங்களில் சலுகைகள்: ஃபிளிப்கார்ட், மிண்ட்ரா , அமேசான் மற்றும் டாடா கிளிக் போன்ற முக்கிய இ-காமர்ஸ் நிறுவனங்களுடன் ஆன்லைன் ஷாப்பிங்கில் 15% வரை தள்ளுபடி

எலக்ட்ரானிக்ஸ்: எல் ஜி, சாம்சங், சோனி, யுரேகா ஃபோர்ப்ஸ், வேர்ல்பூல் மற்றும் பல முன்னணி எலக்ட்ரானிக்ஸ் பிராண்டுகளில் ரூ.26,000 வரை கேஷ்பேக். போஸ் வழங்கும் ஸ்பீக்கர்கள் மீது10% தள்ளுபடி ரூ. 6,000 வரை மற்றும் ஜெ பி எல் இலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தயாரிப்புகளுக்கு 25% ரூ. 12,000 வரை உடனடி கேஷ்பேக். ரிலையன்ஸ் டிஜிட்டல், குரோமா மற்றும் விஜய் சேல்ஸ் ஆகியவற்றில் கவர்ச்சிகரமான தள்ளுபடிகளையும் வாடிக்கையாளர்கள் பெறலாம்.

மொபைல் போன்கள்: ஆப்பிள், ஒன்பிளஸ், மோட்டோரோலா, ஒப்போ, சியோமி மற்றும் ரியால்மி மொபைல்களுக்கு கவர்ச்சிகரமான தள்ளுபடி மற்றும் ஈஎம்ஐ சலுகைகள், ரூ. 2,497 இல் தொடங்கும் ஈஎம்ஐகளுடன் ஐ போன் 15 இல் கட்டணமில்லா ஈஎம்ஐ.

ஃபேஷன்: மற்றவைகளுடன் லைஃப்ஸ்டைல், ஃபாஸ்ட்ராக், மிண்ட்ரா, சென்ட்ரோ போன்ற முன்னணி ஃபேஷன் பிராண்டுகளுக்கு கூடுதல் 10% தள்ளுபடிகள்.

பயணம்: மற்றவைகளுடன் மேக்மைட்ரிப், யாத்ரா, க்ளியர்ட்ரிப் ஈஸிமைட்ரிப் போன்ற முன்னணி பயண தளங்களில் அற்புதமான தள்ளுபடிகள்.

உணவு: சொமேட்டோ, ஸ்விக்கி, ஈஸி டைனர் மற்றும் மெக்டொனால்டு மீது கவர்ச்சிகரமான தள்ளுபடிகள்.

பொழுதுபோக்கு: சோனிஎல்ஐவி ஆண்டு சந்தா மீது அற்புதமான சலுகைகள் மற்றும் சினிபோலிஸ் இன் திரைப்பட டிக்கெட்டுகளில் தள்ளுபடிகள்.

மரச்சாமான்கள் மற்றும் வீட்டு அலங்காரம்: பெப்பர்ஃப்ரை, அர்பன் லேடர் மற்றும் டியூரோஃப்ளெக்ஸ் போன்ற பிராண்டுகளுக்கு 10% தள்ளுபடி

* ஆஃபர்களுக்கு விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பொருந்தும்.

டாடா காபி கிராண்ட், இந்த ஆண்டு சர்வதேச காபி தினத்தையொட்டி, தனது தனித்துவ அடையாளத்துடன் உருவாக்கி இருக்கும் "ஷிக் ஷிக் ஷிக்" என்ற விளம்பரப் படத்தின் மூலம் காபி மீதான தமிழ்நாட்டின் அன்புக்கு இசை அஞ்சலி செலுத்துகிறது!

சென்னை, அக்டோபர் 07 2023: டாடா கன்ஸ்யூமர் புராடக்ட்ஸ் நிறுவனத்தின் பேக்கேஜ் செய்யப்பட்ட காபி பிராண்டான டாடா காபி கிராண்ட், சர்வதேச காபி தினத்தை ஒட்டி தமிழ்நாட்டு மக்களுக்காகவே அர்ப்பணிக்கப்பட்ட, காபி தொடர்பான சிறப்புப் பாடலை வெளியிட்டு தமிழ்நாட்டில் அந்த தினத்தைக் கொண்டாடியுள்ளது. வளமான காபி பாரம்பரியம் மற்றும் தமிழ்நாட்டுப் பகுதியில் காபியின் கலாச்சார முக்கியத்துவம் ஆகியவற்றை நினைவுகூரும் வகையில், டாடா பிராண்ட், தமிழகத்தின் முக்கிய ராப் கலைஞரான அறிவு உடன் இணைந்து இந்தப் பாடலை உருவாக்கியுள்ளது. தமிழ்நாட்டின் கலாச்சாரம், இடங்கள், காபி மற்றும் இந்தப் பகுதியின் தனித்துவமான சினிமாக்கள் மீதான தமிழ்நாட்டின் ஆழமான அன்பை வெளிப்படுத்தும் ஒரு பாடல் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த பாடலில் டாடா காபி கிராண்ட் பேக்கை குலுக்குவதன் மூலம் உருவாகும் 'ஷிக் ஷிக் ஷிக்' என்ற தனித்துவ அடையாளத்துடன் கூடிய ஒலி இடம்பெற்றுள்ளது.

காபி தொடர்பான இந்தப் பாடலை இந்த இணையதள இணைப்பில் காணலாம்: <லீமீ'மீஜீவ://ஷ்ஷ்ஷ்.ஹ்ஷீ ஷுமீ'ஷிதீமீ.நீஷீனீ/ஷ்ணீமீ' நீலீ?ஸ்=6கிஷ்ழி9ஷீஷ்ஸிவ மிமி> உணர்ச்சிகளையும், நினைவுகளையும் தூண்டும் சக்தி இசைக்கு உள்ளது, மேலும் காபியின் வளமான வரலாற்றுப் பாரம்பரியம் மற்றும் அதன் இனிய சுவை தொடர்பான பிரதிபலிப்புடன் இணைந்து பாடலும் அதன் காட்சிகளும் இடம்பெறும்போது, அது கேட்பவர்களுக்கும் பார்வையாளர்களுக்கும் ஒரு சிறந்த உணர்வுப்பூர்மான அனுபவத்தை உருவாக்குகிறது. பரபரப்பான சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம், ராமேஸ்வரத்தில் உள்ள அழகிய பாம்பன் பாலம், கன்னியாகுமரியில் உள்ள கம்பீரமான திருவள்ளுவர் சிலை மற்றும் மன அமைதியைத் தரும் ஆன்மீகச் செழுமை கொண்ட மதுரை மீனாட்சி அம்மன் ஆலயம் போன்ற தமிழ்நாட்டின் முக்கிய அடையாளங்களைக் காட்சிப்படுத்தும் வகையில் இந்தப் பாடலுடன் கூடிய படம் பயணிக்கிறது. ஒரு பாரம்பரிய நாட்டுப்புற நாடக அமைப்பில் புலியாட்டம் மற்றும் கூத்து நடனக் கலைஞர்களின் வசீகரமான நடிப்பும் இதில் இடம்பெற்றுள்ளது. சினிமாவுடனான மாநிலத்தின் ஆழமான தொடர்பையும் இந்தப் பாடல் எடுத்துக் காட்டுகிறது.

ஒரு குடும்பத்தின் தனித்துவமான உறவையும், தமிழ்நாட்டின் நரம்புகளில் ஆழமாக ஓடும் காபி மீதான பொதுவான அன்பையும் விவரிக்கும் இந்தப் பாடல் இறுதியில் வெவ்வேறு கோப்பைகள் மற்றும் சமையலறைகளைக் கொண்ட ஒரு மேஜைக்கு மாறுகிறது. இந்த அடையாளங்கள் மற்றும் கலாச்சார குறிப்புகளை தடையின்றி ஒருங்கிணைக்கிறது. இந்த காபி தொடர்பான பாடல் தமிழ்நாட்டின் காபி கலாச்சாரத்தை அதன் வரலாற்று முக்கியத்துவம் மற்றும் தற்கால ஈர்ப்பு இரண்டையும் இணைக்கும் வகையில் கொண்டாடுகிறது. இதனால் இந்தப் பாடல் பார்ப்பவர்களுக்கு பிரமிப்பூட்டும் வகையில் உணர்ச்சிப்பூர்வமான பயணத்தை கொடுக்கிறது.

காபி தொடர்பான பாடல் குறித்து பேசிய டாடா கன்ஸ்யூமர் ப்ராடக்ட்ஸ் நிறுவனத்தின் பேக்கேஜ் செய்யப்பட்ட பானங்கள் பிரிவுக்கான இந்தியா மற்றும் தெற்காசியப் பிரிவுத் தலைவர் புனித் தாஸ் கூறுகையில், "காபி மீதான தமிழ்நாட்டின் நீடித்த அன்பின் இனிமையான கொண்டாட்டமாக இந்த வசீகரமான காபி கீதத்தை வெளியிட்டுள்ளோம். இதற்காக பிரபல இசைக் கலைஞர் அறிவு உடன் இணைவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். ஒவ்வொரு நாளும் 'காபி நாள்' போல உணரக் கூடிய தன்மை இங்கு உண்டு. இசை மற்றும் காட்சிகளின் மூலம், அந்தக் கலாச்சாரத்திற்கு மரியாதை செலுத்துகிறோம். காபி மீதான தமிழ்நாட்டின் உன்னதமான அன்பைக் கொண்டாடுவதையும் கௌரவிப்பதையும் இந்த கூட்டு இசை உருவாக்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இது இப்பகுதியில் உள்ள மக்களின் அன்றாட வாழ்க்கையில் காபி ஒருங்கிணைந்த பகுதியாகும் என்பதை எடுத்துக்காட்டுகிறது. டாடா கன்ஸ்யூமர் ப்ராடக்ட்ஸ் நிறுவனத்தின் காபியின் தன்மை மற்றும் தரம், பாரம்பரியம் மற்றும் ஒரு காபி மீதான மக்களின் காதல் ஆகியவற்றை இந்த பாடல் விளக்குகிறது. "ஷிக் ஷிக் ஷிக்" என்ற தனித்துவமான அடையாளம் கொண்ட பாடலைச் வெளியிடுவது, விளம்பர இயக்கத்திற்கு ஒரு தனித்துவமான மற்றும் சிறப்பான அம்சத்தைக் கொண்டு வருகிறது. இது பார்வையாளர்களுக்கு மறக்கமுடியாததாக அமைகிறது. இப்பகுதியில் உள்ள நுகர்வோரிடையே காபி, கலாச்சாரம் மற்றும் சினிமா ஆகியவற்றுக்கு இடையில் உள்ள தனித்துவமிக்க உறவை எடுத்துக்காட்டும் வகையில் இந்தப் பாடல் அமைந்துள்ளது. இது இந்த ப்ராண்டின் ஆக்கபூர்வமான முயற்சியாகும். உணர்ச்சிகளை வெளிப்படுத்தவும், கதைகளைச் சொல்லவும் இசைக்கு சிறந்த சக்தி உள்ளது. இந்தக் கூட்டு ஒத்துழைப்பை தமிழ்நாட்டின் காபி பாரம்பரியத்திற்கு மரியாதை செலுத்தும் புதுமையான செயல்முறையாக டாடா காபி கிராண்ட் மாற்றுகிறது." என்றார்.

எனக்கு எண்டே கிடையாது கண்டிப்பாக பார்க்கவேண்டிய படம்


எனக்கு எண்டே கிடையாது
A MOVIE BY VIKRAM RAMESH

சென்னை, அக்டோபர் 07 2023: விக்ரம் ரமேஷ் இயக்கத்தில் விக்ரம் ரமேஷ் கார்த்திக் வெங்கட்ராமன் ஸ்வயம் சித்தா ஷிவகுமார் ராஜூ முரளி சீனிவாசன் சக்திவேல் வெங்கட்ராமன் மற்றும் பலர் நடித்து அக்டோபர் 6 ல் வெளியாகும் படம் எனக்கு என்டே கிடையாது. தமிழ் சினிமாவில் அவ்வப்போது ரெகுலர் இன்டெர்வளில் முற்றிலும் புதுமுகங்கள் நடித்து வெளியாகும் சில படங்கள் நல்ல கவனம் பெறும். அந்த வகையில் தற்போது ரிலீசாகி இருக்கும் எனக்கு எண்டே கிடையாது திரைப்படம் அருமை....

டாக்ஸி டிரைவராக வரும் நாயகன் விக்ரம் ரமேஷ் நாயகி சுவயம் சித்தாவை ஒரு பாரில் இருந்து பிக்கப் செய்கிறார். இருவரும் காரில் பயணம் செய்யும் பொழுதே பேசி நண்பர்களாக மாறுகின்றனர். இதைத் தொடர்ந்து சுவயம் சித்தா மது அருந்த விக்ரமை தன் வீட்டிற்கு அழைக்கிறார். இருவரும் வீட்டிற்கு செல்கின்றனர். போன இடத்தில் இருவரும் மது அருந்திவிட்டு மயக்கமாகி மட்டையாகி விடுகின்றனர். சில மணி நேரங்கள் கழித்து கண் விழிக்கும் விக்ரம் கழிவறை செல்ல முற்படும் நேரத்தில் ஒர் அறையில் ஒரு பிணம் இருப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைகிறார். உடனே அங்கிருந்து தப்பிக்க முயற்சி செய்யும் நேரத்தில் சுயம் சித்தா அங்கு வந்து விடுகிறார். இவர்களுக்குள் நடக்கும் தள்ளும் முள்ளுவில் சுயம் சித்தா இறந்து விடுகிறார்.

முழுக்க முழுக்க ஸ்மார்ட் வீடாக இருக்கும் அந்த பங்களாவில் இருக்கும் கதவுகளுக்கு பாஸ்வேர்டு லாக் போட்டு இருப்பதால் விக்ரமால் அங்கிருந்து தப்பிக்க முடியவில்லை. இதை அடுத்து அவர் தப்பிக்க அல்லாடும் நேரத்தில் அங்கு திருடன் கார்த்திக் அந்த வீட்டினுள் திருட வருகிறார். அதேபோல் அரசியல்வாதி மஸ்தான் பாயும் அந்த வீட்டிற்குள் ஒரு பணப்பெட்டியுடன் நுழைகிறார். அரசியல்வாதியை கண்ட விக்ரமும் திருடன் கார்த்திக்கும் ஒவ்வொரு இடத்தில் அவரவர்கள் ஒழிந்து கொள்கின்றனர். இதை அடுத்து மூவரும் ஒரு கட்டத்தில் சந்தித்துக் கொண்டு ஒருவருக்கொருவர் அடிதடியோடு மோதிக் கொள்கின்றனர். இதைத்தொடர்ந்து மூவருக்குள்ளும் ஒரு கட்டத்தில் சமாதானம் ஏற்பட்டு எப்படி அந்த வீட்டை விட்டு வெளியே தப்பிப்பது என எடுக்கும் முயற்சியில் யார் வெற்றி பெற்றார்கள் என்பதை இந்த படத்தின் மீதி கதை.

இந்தப் படத்தின் நாயகன் விக்ரம் ரமேஷ் இப்படத்தை கதை திரைக்கதை எழுதி இயக்கியிருக்கிறார். ஒரு சின்ன கதையை வைத்துக்கொண்டு இரண்டு மணி நேர படமாக மாற்றி அதை ரசிக்கும்படி கொடுக்க முயற்சி செய்திருக்கிறார். அந்த முயற்சிக்கு ஒரளவு நல்ல பலனும் கிடைத்திருக்கிறது. படத்தை முழுக்க முழுக்க ஒரு பங்களாவுக்கு உள்ளேயே எடுத்திருந்தாலும் அதை சற்று அயற்சி இல்லாமல் கொடுத்து இருப்பதே இந்த படத்திற்கு சற்று பிளஸ் ஆக அமைந்திருக்கிறது. அந்த அளவு ஒரு சிறிய கதையை குழப்பம் இல்லாமல் திரைக்கதை அமைத்திருக்கிறார். அதேபோல் இவர் நடிப்பிலும் ஒரு தேர்ந்த நடிகரைப் போல் சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தி இருக்கிறார். இயக்குநர் விக்ரமுடன் திருடனாக நடித்திருக்கும் கார்த்தி இப்படத்தின் தயாரிப்பாளர் ஆவார். அவரும் தன்னுடைய சிறப்பான நடிப்பால் அறிமுக நடிகர் என்ற உணர்வைத் தர மறுக்கிறார். இவருக்கும் விக்கிரமுக்குமான கெமிஸ்ட்ரி மிக சிறப்பாக அமைந்து படத்தை வேகமாக நகர்த்தி செல்ல உதவி செய்திருக்கிறது. இருவரும் எதார்த்தமான நடிப்பை அசால்டாக வெளிப்படுத்தி கவனம் பெற்றுள்ளனர். அரசியல்வாதியாக வரும் மஸ்தான் பாய் அவருக்கான வேலையை நிறைவாக செய்திருக்கிறார். நாயகியாக வரும் சுயம் சித்தா எப்போதும் போல் கவர்ச்சி காட்டி பின்பு நடிப்பில் அவருக்கு என்ன வருமோ அதையே இந்த படத்திலும் செய்திருக்கிறார். சிறிது நேரமே வந்தாலும் மனதில் பதிகிறார். இந்தப் படத்தில் மற்றொரு பெரிய பிளக்ஸ் ஆக பார்க்கப்படுவது கலை இயக்கமும் ஒளிப்பதிவும் ஆகும். ஒரு ஸ்மார்ட் பங்களாவிற்குள் என்னென்ன அம்சங்கள் இருக்க வேண்டுமோ அதை எல்லாம் சிறப்பாக அமைத்துக் கொடுத்து கதைக்கு ஒத்துழைப்பு தரும்படியான கலை இயக்கத்தை சிறப்பாக கையாண்டு படத்திற்கு ஒரு ரிச்நெஸ்சை கூட்டி இருக்கிறார் ஆர்ட் டைரக்டர் சூர்யா. அதேபோல் ஒரு பங்களாவுக்குள்ளேயே முழு படமும் எடுக்கப்பட்டு இருப்பதால் சுவாரஸ்யமாக காட்சிகளை கொடுக்க மிகவும் மெனக்கட்டு இருக்கிறார் ஒளிப்பதிவாளர் தளபதி ரத்தினம். இவரது நேர்த்தியான ஒளிப்பதிவு படத்திற்கு வேகத்தைக் கூட்டி இருக்கிறது. சூர்யாவின் கலை இயக்கத்தை இன்னமும் நன்றாக மெருகேத்தி காட்டி இருக்கிறார் ஒளிப்பதிவாளர் தளபதி ரத்தினம். இவர்களுக்கு தன் பின்னணி இசை மூலம் பக்க பலமாக இருந்திருக்கிறார் இசையமைப்பாளர் கலா சரண். படத்தொகுப்பாளர் முகன் வேலும் தனது பங்குக்கு நிறைவான படத்தொகுப்பை கொடுத்து படத்தை கரை சேர்க்க முயற்சி செய்து உள்ளார். முற்றிலும் புது முகங்கள் நடித்து வெளியாகி இருக்கும் எனக்கு என்டே கிடையாது திரைப்படம் வித்தியாசமான முயற்சியின் மூலம் சற்று கவனம் பெற்று இருக்கிறது.

எனக்கு எண்டே கிடையாது - கண்டிப்பாக பார்க்கவேண்டிய படம்!

எழுத்தாளர் பொன்னிலன் மற்றும் இயக்குனர் சீனு ராமசாமி உள்ளிட்டோருக்கு "படைப்பு சங்கமம் 2023" விருது

சென்னை, அக்டோபர் 07 2023: இன்றைய டிஜிட்டல் உலகில் இணையத்தின் மூலம் தமிழ் இலக்கியத்திற்கென்று கடின உழைப்போடு சிறப்பான முறையில் இயங்கி வருகிறது படைப்பு குழுமம். கடந்த எட்டு வருடங்களாக கவிதை, கட்டுரை, நூல் விமர்சனம், சிறுகதை போன்ற இலக்கிய வகைமைகளை அரங்கேற்றுவதற்கு தகுதியான மேடையை முகநூல் குழுவின் மூலம் அமைத்துத் தந்திருக்கிறார்கள்.

ஒவ்வொரு வருடமும் நாவல் முதல் கொண்டு அனைத்து வகை இலக்கிய நூல்களையும் பதிப்பு செய்து "படைப்பு சங்கமம் " என்ற பெயரில் பிரம்மாண்டமான விழா எடுத்து மூத்த எழுத்தாளர் வளரும் எழுத்தாளர் என்ற பாரபட்சம் இன்றி அங்கீகரித்து வருகிறது படைப்பு குழுமம்.

நூல் வெளியிடுவதோடு நிறுத்தி விடாமல் படைப்பு குழுமத்தில் பதியப்படும் சிறந்த கவிதைகளில் இருந்து விருதுக்குரியவர்களை தேர்வு செய்து விருதும் , தமிழ் இலக்கியத்தை வளர்க்கும் நோக்கில் சிறுகதை போட்டி,கவிதை போட்டி உள்ளிட்ட போட்டிகளை நடத்தி அதில் பரிசு பெறுபவர்களுக்கு பரிசும் தந்து கௌரிக்கப்படுகிறது.

இந்த வருடமும் செப்டம்பர் 30ஆம் தேதி 2023 ஆம் ஆண்டுக்கான படைப்பு சங்கமம் மிகச் சிறப்பான முறையில் சென்னை தி நகரில் உள்ள சர்ப்பிடி தியாகராஜர் கலையரங்கத்தில் நடைபெற்றது.

இளம் கலைஞர்களின் பறையிசையில் அரங்கம் அதிர தொடங்கிய படைப்பு சங்கமத்தில் எழுத்தாளர் பொன்னிலன், கலை இலக்கிய விமர்சகர் இந்திரன், சிறைத்துறை ஞிமிநி திரு முருகேசன், எழுத்தாளர் சு.தமிழ்ச்செல்வி உள்ளிட்ட மூத்த இலக்கியவாதிகளும் தமிழகத்தின் மூலை முடுக்கில் இருந்தெல்லாம் திரளாக வந்திருந்த இளம் இலக்கியவாதிகள் சங்கமிக்க விழா இனிதே தொடங்கியது. இந்த ஆண்டு படைப்பு சங்கமத்தில் சுமார் 40 இலக்கிய நூல்கள் வெளியிடப்பட்டன. ஒரு தனியார் தொலைக்காட்சி விருது விழாவிற்கு எந்த வகையிலும் குறைவில்லாமல் மிகச் சிறப்பான காணொளிகள் மூலம் எழுத்தாளர்கள் அறிமுகம் செய்யப்பட்டார்கள்.

இந்த வருடத்திற்கான வாழ்நாள் சாதனையாளர் விருது மூத்த எழுத்தாளர் திரு பொன்னிலன் அவர்களுக்கு வழங்கப்பட்டது. தழுதழுத்த குரலில் அவர் தன்னுடைய தாயைப்பற்றியும், தன் இலக்கியப் பணியை தொடர்ந்து செய்யும் தனது மகள்கள் மற்றும் பேத்தியை பற்றியும் பேசியது அரங்கத்தை நெகிழ வைத்தது□. இந்த வருடத்திற்கான படைப்பு சுடர் விருது எழுத்தாளர் சு.தமிழ்ச்செல்வி அவர்களுக்கும் மலையாள எழுத்தாளர் ஷாஃபி சிறூமாவிலாயி அவர்களுக்கும் வழங்கப்பட்டது. அதேபோல கவிஞர் யவனிகா ஸ்ரீராம் அவர்களுக்கும் கவிஞர் தேன்மொழி தாஸ் அவர்களுக்கும் இலக்கியச் சுடர் விருது வழங்கப்பட்டது.

ஒவ்வொரு வருடமும் அந்த வருடத்தில் வெளியான கவிதை கட்டுரை சிறுகதை உள்ளிட்ட அனைத்து இலக்கிய வகைகளுக்கான படைப்பு இலக்கிய விருதுகள் இந்த வருடமும் வழங்கப்பட்டது.

இந்த விருதுக்கு படைப்பு பதிப்பகத்தின் மூலம் வெளியிடப்படும் நூல்களை படைப்பு பரிசீலனை செய்யாது என்பது படைப்பின் நேர்மைக்கான ஒரு சான்று. இந்த வருடத்திற்கான விருதுகளை அந்தந்த பிரிவில் சுமார் பத்து நூல்களுக்கு வழங்கப்பட்டது.

இலக்கியத்தோடு மட்டும் அல்லாமல் சமூகத்தில் சிறந்து விளங்கும் நபர்களை தேர்ந்தெடுத்து படைப்பு சிறப்பு விருதுகள் வழங்குவது படைப்பின் வாடிக்கை. இந்த வருடத்திற்கான இயல் இசை நாடக விருதை தன்னை எங்கும் முன்னிலைப்படுத்திக் கொள்ளாமல் அமைதியாக சேவை செய்து வரும் நாடகவியாளர் மு ராமசாமி அவர்களுக்கு வழங்கப்பட்டது. சினிமாவை இலக்கியம் போலவே படைக்கும் இலக்கியவாதி, உள்ளூர் கதைகளை உலகப் படங்களாக திரையாக்கும் வித்தை பெற்ற, வாத்தியார் பாலு மகேந்திராவின் முதன்மை சீடர் திரு சீனு ராமசாமி அவர்களுக்கு இந்த வருடத்திற்கான கலை இலக்கிய விருது வழங்கப்பட்டது □. தனக்கு பரிசாக வந்த 25 லட்ச ரூபாயை தன்னுடைய கிராமத்தில் உள்ள 120க்கும் மேற்பட்ட வீடுகளுக்கு கழிவறை கட்டித் தந்த அரசு பள்ளி மாணவி ஜெயலட்சுமிக்கு மாண்புமிகு மகளிர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. இதே போல சிறந்த சமூக அக்கறையாளர், சிறந்த பதிப்பகம், சிறந்த கலை உள்ளிட்ட 10 சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டன.

டெங்கு அறிகுறிகளைக் கட்டுப்படுத்த மற்றும் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவும் உணவுகள்!

பிச்சையா காசிநாதன், உணவியல் நிபுணர்,
ஃபோர்டிஸ் மலர் மருத்துவமனை, அடையாறு

சென்னை, அக்டோபர் 07 2023: பருவமழை தொடங்கியுள்ள நிலையில், டெங்கு வைரஸ் தொற்று அதிகரித்து வருகிறது. காலநிலை மாற்றம் மற்றும் அதன் விளைவுகளால் டெங்கு அதிகளவில் பரவுகிறது. நகரமயமாக்கல், காடுகளை அழிப்பதன் மூலம் மற்றும் அதிகரித்து வரும் மக்கள்தொகை மூலமும், தொற்றுக்கு கிருமிகளுக்கு சாதகமான சுற்றுச்சூழலுக்கு வலி வகுத்துள்ளோம். மோசமாக பராமரிக்கப்படும் பகுதிகள் மற்றும் தேங்கி நிற்கும் நீர் ஆதாரங்கள் கொசுக்களின் இனப்பெருக்கம் செய்ய சரியான இடமாக அமைகிறது.

டெங்கு நான்கு வகையான வைரஸால் ஏற்படுகிறது, அவை முக்கியமாக பாதிக்கப்பட்ட பெண் ஏடிஸ் கொசுக்கள் மூலம் பரவுகின்றன. டெங்கு காய்ச்சலை தடுக்க அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டாலும், தொற்று நோய் ஏற்படும் பட்சத்தில் விழிப்புடன் இருக்க வேண்டிய அவசியம் உள்ளது. டெங்கு அதிக காய்ச்சலுடன் தொடங்கும் போது (102-104 டிகிரி எஃப்), டெங்கு பிளேட்லெட்டுகளை அழித்து த்ரோம்போசைட்டோபீனியாவை ஏற்படுத்துகிறது. டெங்குவால் பிளேட்லெட் அபாயகரமான அளவு குறைவதால், நோயாளிகளை மருத்துவமனையில் சேர்க்க வேண்டியிருக்கும். காய்ச்சலுடன் பிளேட்லெட் எண்ணிக்கையும் குறையும். அது நிகழாமல் தடுக்க உங்கள் உடலின் பிளேட்லெட் உற்பத்திக்கு உதவும் குறிப்பிட்ட உணவுகளை நீங்கள் உட்கொள்ள வேண்டும். டெங்கு நோயினால் ஏற்படும் குறைந்த இரத்த அழுத்தம் டெங்கு அதிர்ச்சி நோய்க்குறியை ஏற்படுத்தும். மேலும் போதுமான நீரேற்றம் முக்கியமானது. டெங்குவின் இருந்து பாதுகாத்துக்கொள்ள சாப்பிட வேண்டிய உணவுகளின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது..

பப்பாளி இலைகள்

பப்பாளி இலைகளில் அசிட்டோஜெனின் எனப்படும் தனித்துவமான பைட்டோ கெமிக்கல் உள்ளது, இது டெங்கு நோயாளிகளுக்கு சிறந்த மருந்தாக இருக்கும், ஏனெனில் இது பிளேட்லெட் எண்ணிக்கையை விரைவாக அதிகரிப்பதை உறுதி செய்கிறது. பப்பாளி இலைகளில் ஃபிளாவனாய்டுகள் மற்றும் கரோட்டின் போன்ற பல இயற்கை தாவர கலவைகள் உள்ளன, அவை அழற்சி எதிர்ப்பு மற்றும் ஆக்ஸிஜனேற்ற பண்புகளைக் கொண்டுள்ளன. 4-5 பப்பாளி இலைகளை தண்ணீரில் கொதிக்க வைத்து பப்பாளி இலை சாறு வீட்டில் எளிதாக தயாரிக்கலாம். காலை மற்றும் மாலை 1 கப் குடிக்கவும்.

கோதுமை புல்

ஆய்வுகளின்படி, கோதுமை புல் சாறு இயற்கையாகவே பிளேட்லெட் எண்ணிக்கையை அதிகரிக்க உதவும். இதில் ஃபோலிக் அமிலம், வைட்டமின் பி1, பி2, பி6, பி12 மற்றும் பாந்தோத்தேனிக் அமிலம் நிறைந்த கரிம சேர்மங்கள் உள்ளன. கால்சியம், பொட்டாசியம், மெக்னீசியம் மற்றும் இரும்பு போன்ற தாதுக்களும் இதில் உள்ளன. இது நீடித்த பலவீனத்தை சமாளிக்கவும், இரத்த சிவப்பணுக்களை அதிகரிக்கவும் உதவுகிறது. அதிகபட்ச நன்மைகளைப் பெற, நீங்கள் ஒரு கப் கோதுமைப் புல் சாற்றுடன் எலுமிச்சை பிழிந்து குடிக்கலாம்.

உலர் திராட்சை

உலர் திராட்சை இரும்புச்சத்து நிறைந்த ஆதாரமாக உள்ளது மற்றும் குறைந்த பிளேட்லெட் கொண்ட டெங்கு நோயாளிகளுக்கு உதவும். ஒரு கைப்பிடி திராட்சையை இரவு முழுவதும் ஊறவைத்து, காலையில் ஊறவைத்த தண்ணீருடன் சாப்பிடுங்கள். குறைந்த ஹீமோகுளோபின் அளவு கொண்ட இரத்த சோகை நோயாளிகளுக்கும் இந்த தீர்வு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

உணவுகளில் வைட்டமின் சி

வைட்டமின் சி மற்றொரு முக்கியமான ஊட்டச்சத்து ஆகும், இது உடலில் பிளேட்லெட்டுகளின் உற்பத்தியை அதிகரிக்க உதவுகிறது. ஆரஞ்சு, நெல்லிக்காய், எலுமிச்சை, மிளகு போன்றவற்றை நீங்கள் சாப்பிடலாம், ஏனெனில் இந்த பழங்கள் மற்றும் காய்கறிகளில் அதிக அளவு வைட்டமின் சி உள்ளது, இது டெங்குவின் போது உங்கள் உடலுக்கு உதவுகிறது. எலுமிச்சை தேவையற்ற நச்சுகளை உடைத்து சிறுநீர் வழியாக செல்ல உதவுகிறது.

கொத்தமல்லி தழை

கொத்தமல்லி இலை டெங்குவுக்கு சிறந்த வீட்டு வைத்தியம். டெங்குவின் போது இலைகள் அல்லது தானியாவை அடிக்கடி சேர்த்துக் கொள்வது உடல் வெப்பநிலையைக் குறைக்கவும், நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்தவும் உதவும். இரத்த தட்டுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் உதவுகிறது. பப்பாளி இலைகளின் சுவை உங்களுக்கு பிடிக்கவில்லை என்றால், கொத்தமல்லி இலைகளை சாறு அல்லது தேநீர் வடிவில் எடுத்துக்கொள்ளலாம்.

வெந்தய நீர்

உங்கள் பிளேட்லெட் எண்ணிக்கை ஆபத்தான அளவில் குறைவாக இருந்தால், இந்த இயற்கை தீர்வை நீங்கள் முயற்சி செய்யலாம். 1 தேக்கரண்டி வெந்தய விதைகளை ஒரு கிளாஸ் தண்ணீரில் இரவு முழுவதும் ஊற வைக்கவும். மறுநாள் காலை தண்ணீரை வடித்து சிறிது சூடாக்கி குடிக்கவும். விதைகளை பகலில் வெறும் 3-4 மணி நேரம் ஊறவைத்தால் போதும், பலன் கிடைக்கும்.

பீட்ரூட்

இந்த அடர் சிவப்பு காய்கறி பிளேட்லெட்டுகளுக்கு ஃப்ரீ ரேடிக்கல் சேதத்தைத் தடுக்க உதவுகிறது. டெங்குவினால் உடல் சோர்வு, தலைசுற்றல் அல்லது தூக்கம் வராமல் இருக்க வேண்டுமானால், சீரான இடைவெளியில் பீட்ரூட் சூப் குடிக்கவும். உங்கள் சாலடுகள் மற்றும் சூப்களில் கூட பீட்ரூட்டை சேர்க்கலாம்.

மாதுளை

பல நூற்றாண்டுகளாக பல்வேறு உடல்நலக் காரணங்களுக்காக மாதுளை பயன்படுத்தப்பட்டு வருகிறது. மாதுளையில் வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள் உள்ளன. டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்கள் நீர்ச்சத்து குறைவதைத் தவிர்ப்பது மற்றும் அவர்கள் மேலும் நோய் தீவிரமடையாமல் தடுப்பது அவசியம். டெங்கு காலத்தில் கண்டிப்பாக தவிர்க்க வேண்டிய உணவுகள்: எண்ணெய் அல்லது பொறித்த உணவு, அசைவம், கார்பனேற்றப்பட்ட பானங்கள், பதப்படுத்தப்பட்ட உணவு, காஃபின், காரமான உணவு, சுய மருந்து எடுத்துக்கொள்ளுதல்.

டெங்கு நோயாளிக்கு இருக்கும் மிகப்பெரிய பிரச்சனை நீரிழப்பு. நீரிழப்பு பிரச்சினைகளை தடுக்க, இளநீர், மோர், சூப்கள் மற்றும் ஆல்கஹால் அல்லது கார்பனேற்றப்பட்ட பானங்கள் அல்லாத எந்த திரவத்தையும் உட்கொள்ள பரிந்துரைக்கிறோம்.

டெங்குவுக்கு தடுப்பூசி மற்றும் மருந்து இல்லாததால், நோய்த்தொற்றுக்கு சிகிச்சையளிப்பதை விட நோயைத் தடுப்பது நல்லது. முடிந்தவரை ஓய்வெடுப்பது மற்றும் உடலின் திரவ சமநிலையை பராமரிப்பது முக்கியம். டெங்கு காய்ச்சலும் மீண்டும் வரலாம் மற்றும் ஆரம்ப அறிகுறிகள் தோன்றிய பிறகு வேகமாக வளரும். எனவே, காலை கொசுக்கள் கடித்து, ஏதேனும் அறிகுறிகள் தென்பட்டால், உடனடியாக மருத்துவரை அணுகி முறையான சிகிச்சை பெற வேண்டும். சுய மருந்து கண்டிப்பாக தவிர்க்கப்பட வேண்டும். மேலும், மேற்கூறிய உணவுகளை துணைப் பொருளாக எடுத்துக்கொள்ள வேண்டும். மருத்துவ சிகிச்சை முக்கியமானதாக இருக்க வேண்டும்.

டாடா ஏ ஐ ஜி நிறுவனம், ஒருவரின் பொற்காலங்களுக்கான ஒரு முழுமையான உடல்நலக் காப்பீட்டுத் திட்டமான டாடா ஏ ஐ ஜி எல்டர்கேர் ஐ அறிமுகப்படுத்துகிறது

சென்னை, அக்டோபர் 07 2023: முன்னணி காப்பீட்டு நிறுவனங்களில் ஒன்றான டாடா ஏ ஐ ஜி ஜெனரல் இன்சூரன்ஸ் கோ. லிமிடெட், மூத்த குடிமக்களுக்கான மருத்துவக் காப்பீடுகளின் ஒரு கலவை மற்றும் வீட்டு பராமரிப்பு, தடுப்பு ஆரோக்கியம் மற்றும் உடல் நலம் ஆகிய பல அம்சங்களை உள்ளடக்கும் ஒரு முழுமையான மருத்துவக் காப்பீட்டு திட்டமான டாடா ஏ ஐ ஜி எல்டர்கேர் ஐ அறிமுகப்படுத்துவதாக அறிவித்துள்ளது. டாடா ஏ ஐ ஜி எல்டர் கேர் திட்டமானது, 61 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய தனிநபர்களின் பல்வேறு சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் தனிப்பயனாக்கப்பட்டுள்ளது, இதனால் அவர்கள் தங்களுடைய பொன்னான ஆண்டுகளை ஒரு மன அழுத்தமில்லாத, வசதியான மற்றும் பாதுகாப்பான முறையில் நடத்த முடியும். மூத்த குடிமக்களுக்கான மருத்துவக் காப்பீடு அவர்களின் செலவினங்களைக் கட்டுப்படுத்தும் அதே வேளையில் மருத்துவத் அவசரத் தேவைகளை நிர்வகிப்பதற்கு உதவுவதில் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. மக்கள் வயதாகும்போது, அவர்களின் உடல்நலத் தேவைகள் அதிகரிக்கின்றன, மேலும் மருத்துவச் செலவுகளின் ஆபத்து மிகவும் கவனிக்கத்தக்கதாக இருக்கிறது. இதன் ஒரு விளைவாக, மூத்த குடிமக்களின் குறிப்பிட்ட தேவைகளுக்கு ஏற்ப ஒரு வலுவான உடல்நலக் காப்பீட்டு திட்டத்தை கொண்டிருப்பது ஒருவரின் புத்திசாலித்தனமான நிதித் திட்டமிடலின் ஒரு முக்கிய அங்கமாக இருக்கிறது. அதிகரித்து வரும் மருத்துவச் செலவுகளை பூர்த்தி செய்வதற்கும், ஒரு மருத்துவ சிகிச்சைக்குப் பிறகு மூத்த குடிமக்களுக்கு ஓய்வு அளிப்பதற்காகவும், மூத்த குடிமக்களுக்கு மிகவும் தேவையான உடல்நலக் காப்பீட்டுத் திட்டமான எல்டர்கேர் -ஐ டாடா ஏ ஐ ஜி அறிமுகப்படுத்தியுள்ளது. டாடா ஏ ஐ ஜி எல்டர்கேர் காப்பீட்டுத் திட்டமானது, மூத்த குடிமக்கள் எதிர்பார்க்காத, ஆனால் அவர்கள் வயதாகும்போது தேவைப்படும் மருத்துவத் தேவைகளின் ஒரு பரந்த வகையை உள்ளடக்கியதாக மிக நுணுக்கமாக வடிவமைக்கப்பட்டுள்ளது . டாடா ஏ ஐ ஜி எல்டர் கேர், நோய் தீர்க்கும் உடல்நலப் பராமரிப்பில் கவனம் செலுத்துவது மட்டுமல்லாமல், தடுப்பு மற்றும் பராமரிப்பு உடல்நலப் பாதுகாப்பு சுற்றுச்சூழல் அமைப்பிலும் கவனம் செலுத்துகிறது. கூடுதலாக, இந்தக் காப்பீடானது, ஒவ்வொரு வருடமும் உரிமை கோரல்களைப் பொருட்படுத்தாமல் குறிப்பிட்ட சிறப்புத் துறைகளுக்கான வருடாந்திர தடுப்பு உடல்நல ஆலோசனைகளை வழங்குகிறது. இக்கட்டான சூழ்நிலைகளில், ஒருவருக்கு வீட்டில் பராமரிப்பும் கவனிப்பும் தேவைப்பட்டால், அன்பான கவனிப்பு அம்சம் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. தனிப்பயனாக்கப்பட்ட சுகாதார மேலாளரின் உதவியுடன் மூத்த குடிமக்களுக்கு உதவி வழங்குவதைத் தவிர வீட்டிலேயே சுகாதாரப் பராமரிப்பை வழங்குவதிலும் இந்தக் காப்பீட்டுத் திட்டம் கவனம் செலுத்துகிறது.

நம்பிக்கையின் ஒரு மரபுரிமையாக, பாலிசிதாரர்களுக்கு, குறிப்பாக அவர்களின் பொற்காலங்களில் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு முன்னுரிமை பெறுகிற அவர்களின் உடல்நலக் காப்பீடு சமரசம் செய்யப்படாமல் இருக்கும் என்று டாடா ஏஜஜி உறுதியளிக்கிறது. டாடா ஏ ஐ ஜி ஜெனரல் இன்சூரன்ஸ் கோ. லிமிடெட் இன் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை செயல் அதிகாரி நீலேஷ் கர்க், "நாங்கள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பை மறுவரையறை செய்யும் பயணத்தைத் தொடங்கும்போது, எங்கள் மூத்த குடிமக்களுக்கான எங்கள் அர்ப்பணிப்புக்கான ஒரு சான்றாக டாடா ஏ ஐ ஜி எல்டர் கேரை அறிமுகப்படுத்துவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இரக்கம், புதுமை மற்றும் முழுமையான காப்பு ஆகியவற்றின் கலவையுடன், இந்த காப்பீட்டுத்திட்டமானது, நமது மூத்தவர்களின் பொற்காலங்களில் அவர்களின் ஆரோக்கியம் மற்றும் வசதியை உறுதி செய்வதற்கான எங்களின் அர்ப்பணிப்பை உள்ளடக்குகிறது டாடா ஏ ஐ ஜி எல்டர் கேர் அவர்களின் ஆரோக்கியம் மற்றும் மகிழ்ச்சியைப் பாதுகாப்பதில் உறுதியான மற்றும் ஒரு நம்பகமான பங்காளியாக இருக்கும் என்ற எங்கள் உறுதியான வாக்குறுதியை பிரதிபலிக்கிறது."என்று கூறினார்.

டாடா ஏ ஐ ஜி எல்டர் கேர், மூத்த குடிமக்களின் தனிப்பட்ட தேவைகளை உண்மையிலேயே பூர்த்தி செய்யும் பின்வரும் முக்கிய அம்சங்களை வழங்குவதால், மற்ற காப்பீட்டுக் கொள்கைகளிலிருந்து தன்னை வேறுபடுத்திக்கொள்கிறது :

வீட்டு செவிலியர் சேவைகள்: காப்பீடு செய்யப்பட்ட நபர், பாலிசி ஆண்டில் ஒரு நபருக்கு 7 நாட்கள் வரை, அறுவை சிகிச்சைக்குப் பிந்தைய பராமரிப்பின் ஒரு பகுதியாக, வீட்டுச் செவிலியர் சேவைகளைப் பெறலாம்.

தனிப்பயனாக்கப்பட்ட உடல்நல மேலாளர்:

ஒரு பிரத்யேக உடல்நல மேலாளர், அறுவை சிகிச்சைக்குப் பிந்தைய பராமரிப்பின் ஒரு பகுதியாக, மருத்துவ பராமரிப்புக்கான தடையற்ற அணுகலை உறுதி செய்து, சந்திப்புகளை திட்டமிடுதல் மற்றும் ஒருங்கிணைக்கும் சேவைகளில் காப்பீடு செய்யப்பட்ட நபருக்கு உதவுவார்.

வீட்டு பிசியோதெரபி: மூட்டு மாற்று அறுவை சிகிச்சை, மூளை இரத்தக்கசிவு அல்லது பக்கவாதம் ஏற்பட்டால், காப்பீடு செய்யப்பட்ட நபர் இந்தியாவிற்குள் 10 பிசியோதெரபி அமர்வுகள் வரை பெறலாம்.

ஆரோக்கியச் சேவைகள்: காப்பீடு செய்யப்பட்ட நபர், தொலைபேசி வழி ஆலோசனைகள், உணவு மற்றும் ஊட்டச்சத்து ஆலோசனைகள் மற்றும் நோய் கண்டறிதல் சோதனைகள், மருந்து, மருத்துவச் சாதனங்கள், உடல்நல துணைப் பொருட்கள் மற்றும் பிற உடல்நலம் தொடர்பான சேவைகள் போன்றவற்றை எங்கள் வாடிக்கையாளர் செயலியின் மூலம் தங்கள் விரல் நுனியில் ஆரோக்கிய சேவைகளை அணுகலாம். மருந்தகத்திற்கான வீட்டு விநியோக சேவைகள் கிடைக்கும் இடங்களில் கோரிக்கையின் பேரில் வழங்கப்படுகின்றன.

சாய் சஹஸ்ரநாமம் தெலுங்கு புத்தகத்தை ஜார்க்கண்ட் ஆளுநர் சி பி ராதாகிருஷ்ணன் சென்னையில் வெளியிட்டார்

சென்னை, அக்டோபர் 07 2023: அமுத சுரபி ஆசிரியர் திருப்பூர் கிருஷ்ணன், ஹரிஜன சேவக் சங்க தமிழ்நாடு மாநில தலைவர் பிடிக்கிட்டி மாருதி, திரைப்பட இயக்குநர் வசந்த் எஸ் சாய் ஆகியோர் நூலை பெற்றுக் கொண்டனர்

சென்னை மேற்கு மாம்பலத்தில் உள்ள ஜெய்சங்கர் தெருவில் அமைந்துள்ள சாய்பாபா கோவிலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 'சாய் சஹஸ்ரநாமம்' புத்தகத்தின் தெலுங்கு பதிப்பை ஜார்க்கண்ட் ஆளுநர் திரு சி பி ராதாகிருஷ்ணன் வெளியிட்டார்.

ஸ்ரீ ஷீரடி சாய் சேவா சமாஜ் தலைவர் பி ஸ்ரீ நிவாஸ் இப்புத்தகத்தை தெலுங்கில் மொழிபெயர்த்துள்ளார். புத்தகத்தின் பிரதிகளை ஆளுநரிடம் இருந்து அமுத சுரபி ஆசிரியர் திருப்பூர் டாக்டர் கிருஷ்ணன், ஹரிஜன சேவக் சங்க தமிழ்நாடு மாநில தலைவர் பிடிக்கிட்டி மாருதி, பிரபல திரைப்பட இயக்குநர் வசந்த் எஸ் சாய் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

புத்தகத்தை சிறப்பாக மொழிபெயர்த்த ஆசிரியர் ஸ்ரீநிவாஸை ஜார்க்கண்ட் ஆளுநர் திரு சி பி ராதாகிருஷ்ணன் பாராட்டினார். பயனாளிகளுக்கு கல்வி உதவிகளையும் அவர் வழங்கினார்.

ஸ்ரீ ஷீரடி சாய் சேவா சமாஜ் செயலாளர் எஸ் ஸ்ரீ நிவாசன் வரவேற்புரை வழங்கினார். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் நூலின் ஆசிரியர் பி ஸ்ரீநிவாஸ் நன்றி கூறினார். அகில பாரத சாய் சேவா சமாஜ் முன்னாள் செயலாளர் எஸ் சேஷாத்ரி, சமூக சேவகர் சி கோபாலன் ஆகியோர் பேசினர். ரத்தினம் ராஜகோபாலன் நன்றியுரையாற்றினார்.